முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி புரட்டாசி மாதம் 7ம் திகதி முதல் புரட்டாசி மாதம் 14ம் தேதி வரை**

**செப்டம்பர் 23ம் திகதி முதல் செப்டம்பர் 30ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **உலகே வியக்கும் இயற்கை பலம்**
   **உயர்வான இறைபலமும் கொண்ட பரதமே**
   **உலகமெங்கும் தமிழ் மக்களை**
   **உயர் சேவையாக நிரப்பி தருமமுடன்**

2. **தருமமுடன் தமிழ் மொழி மரபென**
   **தலை சிறந்த தலைநிமிர்ந்த தமிழகமே**
   **வருமுலகின் எதிர்கால பலனாக**
   **வழங்குவேன் இந்தியா தமிழகம் தன்னில்**

3. **தன்னிலே விளம்பி நங்கை திங்களில்**
   **தக்க நாத திகதி மேல் முன்னான்கீர் திகதி வரை**
   **(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018, ஞாயிறு முடிய)**
   **இன்னாளில் நடக்கும் வார நிகழ்வாக**
   **இயம்பிடுவேன் சுப்பிரமணியர் யானும் ஆசிதனை**

4. **தன்னிலே இந்தியா தன் எல்லை**
   **தர்மசங்கடமான கச்சா தைல விலை**
   **இன்னலென அரசுக்கு நெருக்கடியில்**
   **எரிபொருள் எரிவாயு விலை ஏற்றங்கள்**

5. **ஏற்றங்கள் வளரவிடா பரதத்தை**
   **இறக்கவிட நேரும் பண மதிப்பில்**
   **மாற்றங்கள் தரா சூழலில்**
   **மக்களின் எதிர்ப்பு கண்டு பதவியாளர்கள்**

6. **பதவியாளர்கள் பலம் இழக்க நேரும்**
   **பாரத மத்தியும் மாநிலங்களிடை**
   **ஆதரவு பலமும் இழக்க நேரும்**
   **ஆதாயம்பட தருமம்பட வராக்கடன்**

7. **கடனுடன் ஏமாற்றும் பெரும் முதலை**
   **கடன் நிதிகளை வசூலிக்க**
   **இடரில்லா மத்தியும் மீண்டு**
   **எல்லா வகையும் மாற்றம் பெறும்**

8. **மாற்றமும் தமிழக எல்லையில்**
   **மத்தியும் தயவுபட நடக்க**
   **ஆற்றல்பட வளர்ச்சி காணும்**
   **அரச பதவியாளர் அதிகாரிகளென**

9. என தவறிழைத்தோர்கட்கு
எந்த பாரபட்சமும் காட்டா
ஞானமுடன் தண்டிக்கும் அரசே
ஞானபண்டிதன் என் அருள் பெற்று

10. அருள்பட எல்லா ஆளுமை கண்டு
ஆறுமுகன் என் ஞானஆட்சிக்கு
வருமுலகில் வகை காணும்
வளருகின்ற கொள்ளை அநீதிகளை

11. அநீதிகளை கட்டுப்படுத்திடும்
அரசே மக்கள் பாதுகாப்பில்
மனுநீதி சோழன் அரசுபோல்
மக்கள் போற்றும் அரசாக மாறும்

12. மாறுதலான வேலை வாய்ப்புகளை
மாண்புடன் பெருக்கி தருமபடி நிரப்பி
தேறுதலை சந்திக்கும் அரசே
திரும்ப வரும் தொடர நேரும்

13. நேருமைபட அன்னதனால் தமிழகத்தில்
ஞான வழி காட்டும் ஆறுமுக ஞானி
தருமம் காக்கும் அரங்கமகா ராசனை
தரிசித்து பதவியாளர்கள் வணங்கி வர

14. வருகவே தரும தயவு சிந்தை பெருகி
வருமுலகில் ஞான ஆட்சியாக மாறும்
முருகன் என் தயவுபட இந்தியா தமிழகம்
முதன்மை பெறும் உலகம் வியக்க வார ஆசி நூல் முற்றே.

—சுபம்—

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

உலகமே வியக்கும்படியாக இயற்கை பலத்தினை உடையதும் உயர்வான இறைபலமும் கொண்ட பாரததேசமே உலகமெங்கும் சேவை செய்யும்படியாக தமிழ் மக்களை உயர்சேவையாக நிரப்பி தருமத்துடன் தமிழ் மொழி, மரபு, பாரம்பரியம், கலாச்சாரம் என தலைசிறந்து விளங்கும் தலைநிமிர்ந்து விளங்கும் தமிழகமே வருங்காலமான விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018, ஞாயிறு முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்திய தேசத்தில் தர்ம சங்கடமான சூழல் உருவாகும். கச்சா எண்ணெய் விலையானது அரசிற்கு துன்பம் தரும் விதத்தில் அதிகரித்து அரசுக்கு நெருக்கடியை உண்டாக்கும், கச்சா எண்ணெய் விலை ஏற்றத்தினால் அதைச் சார்ந்த எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் உயர்ந்து பாரத தேசத்தின் வளர்ச்சியை பாதிக்கும்.

பணமதிப்புகள் சரிவடைவதினால், எந்தவித மாற்றங்களும் நடைபெறாமல் தடுமாற்றம் உண்டாவதினால் மக்களிடம் அரசிற்கு எதிர்ப்பு உண்டாகும், பதவியாளர்கள் பலம் இழந்திட நேரிடும். மத்தியை ஆளும் மத்திய அரசு மாநிலங்களின் ஆதரவினையும் பலத்தினையும் இழக்க நேரிடும்.

இந்தியாவின் சுமையான வாராக்கடன்களை மத்திய அரசும் வசூலிப்பதில் தீவிரம் காட்டும். ஏமாற்றும் பெரும் முதலைகளிடம் இருந்து கடனை வசூலிக்க உள்ள தடைகளை மத்திய அரசும் நீக்கி வசூலித்து எல்லா வகையிலும் மாற்றம் பெறும்.

தமிழகத்தின் மீது மத்திய அரசு தயவுபட நடந்திட தமிழகம் ஆற்றல்பட வளர்ச்சி காணும் அரசில் பதவி வகிப்போர் அதிகாரிகள் என்று தவறிழைத்தோர்களுக்கு எந்தவிதமான பாரபட்சமும் காட்டாமல் சிறந்த அறிவுடன் செயல்பட்டு தண்டிக்கும்.

தவறிழைத்தோர் மீது பாரபட்சமும் பார்க்காமல் தண்டிக்கும் நீதியுள்ள அரசே வருங்காலங்களில் உருவாகும். ஞானயுகத்தினில் ஞானஆட்சியில் ஞானபண்டிதன் முருகப்பெருமான் எனது அருளைப் பெற்று ஆளுமை கண்டு ஞானஆட்சிக்கு வகையாய் உதவிகள் செய்து ஆட்சி செய்யும்.

நாட்டினில் நாள்நாளும் பெருகி வருகின்ற கொள்ளைகளும் அநீதிகளும் அரசினால் கட்டுப்படுத்தப்படும். மக்களை ஆளும் அரசு இனி மக்களை பாதுகாப்பதில் மனுநீதி சோழன் அரசைப் போல் செயல்பட்டு மக்கள் போற்றும் அரசாக மாறிடும்.

நாட்டினில் உள்ள வேலையில்லா திண்டாட்டத்தை போக்கும்படியான முறையில் நாட்டினில் புதிய வேலை வாய்ப்புகளை பெருக்கி அந்த வேலை வாய்ப்புகளுக்கு உண்டான பணியாளர்களை அதிகாரிகளை நீதிநெறி மாறாது பணியமர்த்தி அரசாட்சி செய்யும் தரும அரசே இனிவரும் தேர்தலை சந்திக்கும், தருமத்துடன் நடந்து கொள்ளும் அரசு எதுவோ அதுவே மீண்டும் ஆட்சிக்கு வரும்.

ஆதலினாலே ஞானபூமியாம் தமிழகத்தினில் ஞானவழிதனை காட்டி மக்களை வழிநடத்திக் காக்கின்ற அரங்கமகா தேசிகனை தரிசித்து பதவியில் உள்ளோர் வணங்கி வரவர, தருமசிந்தைகள் பெருகி ஞானசிந்தை உருவாகி தயைசிந்தை பெருகி வரும் உலகினில் அமையும் ஆட்சி ஞான ஆட்சியாக மாறிடும். முருகப்பெருமான் எனது தயவினால் அருளாசியினால் இந்தியாவும் தமிழகமும் உலகமே வியக்குமாறு உலகினில் முதலிடத்தை அடையும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–